# வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

## நீராபானம்

தென்னை மரத்தின் முதிர்ச்சி பெறாத பாளையிலிருந்து / பூங்கொத்திலிருந்து பெறப்படும் மது அல்லாத சத்துள்ள பானமே நீரா ஆகும். நீரா அதிக அளவு சர்க்கரை கொண்ட சுகாதாரமான சுவையான பானம். இப்பானத்தில் கனிமங்கள் மற்றும் உயிர்சத்துக்கள் உள்ளன.

தமிழக அரசாணை எண்.41 நாள் : 21.12.2017-ன்படி நீராபானம் சேகரிப்பதற்கான உரிமத்தை தென்னை உற்பத்தியாளர்கள் கம்பெனி (Coconut Producer Company) மற்றும் தென்னை உற்பத்தியாளர்கள் சங்கம் (Coconut Producer Society) பெறலாம். பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் நீராபானத்தை அனுமதி பெறப்பட்ட மரங்களிலிருந்து சேகரிக்க வேண்டும். நீராபானத்திற்கான உரிமம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கப்படும்.

**நீராபானம் சேகரிக்க உரிமம் பெறுதல்.**

1) நீராபானம் சேகரிக்க மேலே குறிப்பிட்டுள்ளபடி தென்னை உற்பத்தியாளர் சங்கம் மற்றும் தென்னை உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு உரிமம் வழங்கப்படுகிறது.
2) இவ்வுரிமம் பெறுவதற்கான கட்டணம் ரூ.500/-ஐ கருவூலத்தில் செலுத்த வேண்டும்.
3) நிதி ஆண்டுதோறும் இவ்வுரிமம் புதுப்பிக்கப்பட வேண்டும்.(ஏப்ரல் - மார்ச்)
4) உரிமம் பெறுவதற்கான விண்ணப்பத்தினை தென்னை வளர்ச்சி வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் மற்றும் கம்பெனிகளுக்கு தென்னை வளர்ச்சி வாரியமும், கூட்டுறவு சங்க பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளரும், கம்பெனி பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்)மும் பரிந்துரை செய்ய வேண்டும்.
5) நீராபானம் சேகரிப்பதற்கான உரிமம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கப்படும்.
6) நீராபானம் சேகரிப்பதை இணை/உதவிஆணையர் (கலால்), மதுவிலக்கு (Prohibition) அலுவலர், காவல்துறை ஆய்வாளர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் ஆய்வு செய்யலாம்.
7) நீராபானம் சேகரித்து விற்பனை செய்வதற்கு படிவம்-I மற்றும் மதிப்புக்கூட்டுவதற்கு படிவம்-II தனித்தனியே உரிமம் பெறவேண்டும்.

வேளாண்மை துணை இயக்குநர்,
வேளாண் வணிகம்,
சிவகங்கை